INTACH
MADURAI
Indian National Trust for Art and Cultural Heritage

இந்தியக் கலை மற்றும் பண்பாடு மரபின்
தேசிய அறக்கட்டளை - மதுரை பிரிவு

# மதிரய்

செய்திமடல் - சித்திரை 2023



**புத்தாண்டு பிறக்கும்
இளவேனில் தலைநாள்
சித்திரை முதல்
புது இலக்கு சிறகடிக்கும்
நாள்தோறும் மகிழ்ந்து
உயர்ந்திட வாழ்த்துவோம்!**



## 01. கோடை வெயில் பூரிப்பில் வேப்பம்பூ

'சினையலர் வேம்பன்' - வேம்பு மரக்கிளைதோறும் அன்றலர்ந்த பூவினில் தொடுக்கப்பட்ட மலர்மாலை அணிந்த பாண்டிய மன்னன் வேம்பலரோன் அல்லது வேம்பன் என அழைக்கப்பட்டான். மன்னரால் ஏற்று அணியப்படும் பூவாக வேப்பம்பூ ஆளுமைக்குரிய சின்னமாக சிறப்பு எய்தியதை ஐம்பெருங்காப்பிய முதன்மை நூலான சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.



மதுரை மரபு மாண்பினை தொடுத்து வழங்கும் செய்திமடல். தமிழ் பண்பாட்டுத் தலைநகரமாய் போற்றப்படும் மதுரை செம்மொழி வளர்த்த பேறுடையது. பண்டைய பாண்டிய மன்னர் வழி மரபினர் சீராட்டி செழுமை கண்ட தென்னாட்டின் தலையாய மாநகரம். தமிழ் கூறும் இந்நல்லுலகை சிறப்பிக்கும் இலக்கியம், கல்வெட்டு தரவுகளிலிருந்து தேன்துளி தகவல் ஏந்தி மடல் ஒவ்வொன்றும் மலரும். நுகர்ந்து இன்புறவும் நாளும் ஊக்கம் அளிக்கும் மரபு சார்ந்த நடப்பு நிகழ்வுகளையும் பகிர்கிறது.

ஆக்கம் தொகுப்பு அமைப்பு: வாணி | நித்தன் சந்திரசேகரன் | மதன்

## 02. வனம் வாழ்வன

## மஞ்சமலை (ஏப்ரல் 9)



பச்சைப் பஞ்சுருட்டான்



பெரிய அலகு கதிர்க்குருவி



இரட்டைவால் சிறகன்



வெண்புருவக் கொண்டலாத்தி




கள்ளிக்குயில்



சுருள் கோளவலைச் சிலந்தி

## 03. **கல்வெட்டு காட்டு**

மதுரை பெயர் முற்காலத்தில் அழைக்கப்பட்ட விதத்தை பழைய தமிழ் வரிவடிவான தமிழி அல்லது தமிழ் பிராமி கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன.




அழகர்மலைத்தொடரில் கிடாரிப்பட்டி சிற்றூர் அருகே பழங்குடிமக்களின் உறைவிடமாகத் திகழ்ந்த சுனையுடைய இயற்கை குகையதன் அகன்ற நுழைவாயில் மேலே காணலாம். 'மதிரய்' என்றும் 'மத்திரை' என்றும் இருவிதமாக கூறப்பட்டுள்ளன. ஏறத்தாழ முதலாம் பொது காலத்திற்கு முன் (பொ.கா.மு) தென்படும் எழுத்தமைதியில் ஒரேப்பெயரது எழுத்து வடிவு பரிணமிக்கும் வளர்ச்சிநிலையை ஒரு கல்வெட்டிலிருந்து இன்னொரு கல்வெட்டில் காணமுடிகிறது.

**மரபு தினம் ஏப்ரல் 18 சிறப்பு கருதி 'கீழடி அருங்காட்சியகம்' காண மாலை 4 மணிக்கு நமது உறுப்பினர்கள் குடும்பத்தினருடன் வர அழைக்கிறோம்.**

## **தமிழ்நாடு அகழாய்வு பணி 2023 முதல் முறையாக எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் (ஏப்ரல் 6) தொடங்கியது.**

- சிவகங்கை மாவட்டம் கீழடி - ஒன்பதாவது கட்டம்
- அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் - மூன்றாவது கட்டம்
- திருவள்ளூர் மாவட்டம் பட்டறைப்பெரும்புதூர் - மூன்றாவது கட்டம்
- விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை - இரண்டாவது கட்டம்
- திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி - இரண்டாவது கட்டம்
- தர்மபுரி மாவட்டம் போதிநத்தம் - முதல் கட்டம்
- புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டை - முதல் கட்டம்
- திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டி - முதல் கட்டம்





## 04. சிறுதெய்வ அம்மன் விழா பங்குனி கோலாகலம்



பங்குனி மாதம் தாயமங்கலம் முத்துமாரியம்மன் துணைக்கொள்ள காண்போர், வழிபடுவோர் எத்தனை! எத்தனை! மட்பாண்டம் புகழ் மானாமதுரை ஊரின் அருகே உள்ள சிற்றூர் தாயமங்கலம். எண்ணற்றோர் வருகையில் பங்குனி பெருவிழா களைகட்டும். வேண்டுதல் பொருட்டு நோன்பு பூண்டோர் ஊருணியில் நீராடி தீச்சட்டி வெப்பம் தாங்கி, வேப்பங்கொத்துடன் நிறைவு செய்வர். அம்மன் முகப்பு தீச்சட்டி ஓர் அல்லது ஈர் அல்லது 21 வரை தீச்சட்டி ஏந்தியவர்களுக்கு தீவளர்ப்போர் உண்டு.

அயராது இரவு இருளில் ஒய்யார அணிவகுப்பினிலே தீச்சுடர்விடும் கண் பானை சுமந்தும் வலம்வருதலைக் காணலாம். அம்மன் அருளாசியில் ஆடி பரவசப்படுத்தும் தப்பை இசைக்கப்படுகிறது. உடனிருப்போர் இருந்தாலும் இறுதியில் இறக்கிடும் பணி குறவர் பொறுப்பாகிறது.







## 05. வெற்றிநடைப்போடும் புலிகள் பாதுகாப்புத் திட்டம் (Project Tiger) 1973 - 2023

பொன்விழா கொண்டாடுகிறது. இந்திய வனவிலங்கு உணவுச்சங்கிலியில் முதன்மை இடம்பெறுவது தேசிய விலங்காக சிறப்பிக்கப்படும் புலி. நாட்டில் உயிர்வாழும் புலிகளின் எண்ணிக்கையை உறுதிசெய்து பேணிப் பாதுகாக்கவும், அவைகளின் பாரம்பரிய வாழ்விடங்களை அழியாமல் காக்கவும் இத்திட்டம் வழிசெய்கிறது. இதற்கெனத் தனியான சரணாலயங்கள் தமிழகத்திலும் ஏற்படுத்தப்பட்டு புலிகள் வாழ்வதற்கான இயற்கையான சூழ்நிலை பேணப்படுகிறது. காப்பகங்களில் அழிவுநிலையிலுள்ள பிற தாவர-விலங்கினங்களும் மீட்கப்பட்டு வாழ்கின்றன.









**தமிழ்நாட்டு புலிகள் காப்பகங்கள்**.

- இந்தியாவில் இண்டாவது பெரிய - களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகம், திருநெல்வேலி- கன்னியாகுமரி மாவட்டம் (1988-89)
- முதல் தென்னிந்திய - முதுமலை வனக்காப்பகம், நீலகிரி மாவட்டம் (2007)
- இந்திரா காந்தி வனவிலங்கு உய்வகம் மற்றும் வனக்காப்பகம், ஆனைமலை புலிக்காப்பகம், கோவை-திண்டுக்கல் மாவட்டம் (2008)
- சத்தியமங்கலம் வனவிலங்கு உய்வகம் மற்றும் காப்பகம், ஈரோடு மாவட்டம் (2010)

**Coin Release Details**

| Obverse | Reverse |
|---|---|
| ❖ Ashoka Lion Emblem with Legend "सत्यमेव जयते".<br>❖ Denomination with Rupee Symbol "₹".<br>❖ Legend "भारत" and "INDIA" on sides. | ❖ Image of Tiger.<br>❖ Legend "व्याघ्र परियोजना के 50 वर्ष" in Devanagari Script and "50 Years of Project Tiger" in English with year 1973 – 2023 at the right side. |

| Denomination | Type | Metal Composition | Weight | Diameter | Shape |
|---|---|---|---|---|---|
| ₹ 50 | Non-Circulating | Quaternary Alloy | 35 gms | 44 mm | Circular |

| Primary Mint | Release Date |
|---|---|
| Hyderabad | 9th April 2023 |

© NumismaticsCollections.Blogspot.com

The Prime Minister Shri Narendra Modi inaugurated the programme 'Commemoration of 50 years of Project Tiger'. A commemorative coin was released on completion of 50 years of Project Tiger organised at Karnataka State Open University, Mysuru. Minister for Environment, Forest & Climate Change Shri Bhupender Yadav and Minister of State Shri Ashwini Kumar Choubey were also present on the occasion.